**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006**

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச்/ஏப்ரல் 2023**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல்-II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 07.06.2023 (**புதன் கிழமை) பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification-ஐ Click செய்தவுடன் **HSE (First Year) March/April 2023 -Answer Script Scanned Copy Download** ” என்ற வாசகத்தினை “Click” செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் –II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் HR SEC FIRST YEAR MARCH 2023 -APPLICATION FOR RE-TOTALLING-II AFTER OBTAINING SCANNED COPY OF ANSWER SCRIPTS / HR SEC FIRST YEAR MARCH 2023 - APPLICATION FOR REVALUATION AFTER OBTAINING SCANNED COPY OF ANSWER SCRIPTS என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து 08.06.2023 ( **வியாழக் கிழமை) பிற்பகல் முதல்** 10.06.2023 ( **சனிக் கிழமை) மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

..2..

புதிதாக உருவாக்கப்பட்ட தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் **மறுகூட்டல் –II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும்** தேர்வர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து, அதற்குரிய கட்டணத் தொகையை பணமாக செலுத்த வேண்டும்.

**மறுமதிப்பீடு**

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

**மறுகூட்டல்-II**

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

ஒம்/-

**இயக்குநர்**

**நாள்** : 06.06.2023.

**இடம்** : சென்னை – 600 006.